இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 14-07-2025

# ரயில்வே துறை உடனடியாகச் செய்ய வேண்டும்!

**அநியாயமாக மூன்று உயிர்கள் பலியாக ஒன்றிய ரயில்வே துறையின் அலட்சியமே காரணம் என்பது அம்பலம் ஆகி இருக்கிறது. ரயில்வே கேட் கீப்பரின் அலட்சியமே மாணவர்கள் உயிரிழப்புக்கு காரணம் என்று காவல் துறை விசாரணையில் தெரிய வந்துள்ளது.**

கடந்த 8ஆம் தேதி கடலூர் செம்மங்குப்பம் ரயில்வே கேட்டில் மிகப்பெரிய விபத்து நடந்தது. தண்டவாளத்தை கடக்க முயன்ற பள்ளி வேன் மீது ரயில் மோதியது. ரயில் வருகிறது என்றால் கேட் மூட வைக்கப்பட்டு இருக்க வேண்டும். கேட் திறந்து இருந்ததால் பள்ளி வாகனம் செல்ல முயற்சித்துள்ளது. கேட்டை மூடாதது யார் தவறு? ரயில்வே ஊழியரின் மாபெரும் தவறு ஆகும். இந்த விபத்தில் மூன்று உயிர்கள் பரிதாபமாக பலியானது.

"நான் கேட்டை மூடித்தான் வைத்திருந்தேன். அவசரமாகச் செல்ல வேண்டும் என்று சொல்லி வேன் டிரைவர், ரயில்வே கேட் கதவைத் திறக்கச் சொன்னார். அதனால் திறந்தேன்" என்று பொய் சொன்னார் கேட் கீப்பர் பங்கஜ் சர்மா. அவரை காவல் துறை கைது செய்து சிறையில் அடைத்துள்ளது. இந்த விபத்து குறித்து ரயில்வே ஊழியர்கள் 11 பேருக்கு சம்மன் அனுப்பப்பட்டு விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

செம்மங்குப்பம் ரயில்வே கேட்டை மூடிவிட்டதாக, ஆலப்பாக்கம் நிலைய அதிகாரியிடம் கேட் கீப்பர் பங்கஜ் சர்மா பொய் கூறியது காவல்துறை விசாரணையில் அம்பலமாகியுள்ளது. ரயில்வே கேட்டை மூடாமல், அதை மூடி விட்டதாக ஆலப்பாக்கம் ரயில் நிலைய அதிகாரிக்கு தகவல் கொடுத்தது கண்டறியப்பட்டுள்ளது. விபத்து நடைபெற்ற பிறகு, ரயில் நிலைய அதிகாரியை தொடர்புகொண்ட கேட் கீப்பர், 'கேட்டை மூட வில்லை' என்பதை ஒப்புக் கொண்டுள்ளார் என்பது இருவருக்கும் இடையிலான தொலைபேசி உரையாடல் மூலம் தெரிய வந்துள்ளது. ரயில் வரும் போது கேட்டை மூடாமல், இந்த கேட் கீப்பர் தூங்கிக் கொண்டிருந்தார் என்று அப்பகுதி மக்கள் சொல்கிறார்கள்.

ரயில்வே கிராசிங் என்றால் ரயில் இன்ஜின் டிரைவர், ஹாரன் அடிப்பார். அதுவும் செய்யப்பட வில்லை.

**"செம்மங்குப்பம் ரயில்வே கேட் அருகில் நான் வேனை ஓட்டி வந்தபோது, ரயில்வே கேட் திறந்து இருந்தது. இதனால் ரயில் வரவில்லை என்பதை உறுதி செய்துதான் தண்டவாளத்தை கடக்க முயன்றேன். ரயில்வே கேட் மூடி இருந்தால் கடக்க முயன்றிருக்க மாட்டேன்"** என்று சொல்லி இருக்கிறார் வேன் டிரைவர் சங்கர். இதன் மூலமும் கேட் கீப்பரின் மெத்தனத்தை உறுதி செய்ய முடிகிறது.

**சம்பவம் நடந்த இடத்தை பார்வையிட வந்த தென்னக ரயில்வே பொதுமேலாளர் ஆர்.என்.சிங், " இந்த விபத்துக்கு கேட் கீப்பரின் கவனக்குறைவு மற்றும் லட்சியப் போக்கே காரணம்" என்பதை ஒப்புக் கொண்டார். " அதிகப் போக்குவரத்து உள்ள இடங்களில் கேட் மூடப்படுவதற்கும், சிக்னலைத் தெரிந்து கொள்வதற்கும் 'இன்டர் லாக்' என்ற முறை பயன்படுத்தப்பட்டு வருகிறது. அது இங்கு இல்லை" என்பதையும் அவர் ஒப்புக் கொண்டுள்ளார்.**

தெற்கு ரயில்வேயில் 1,643 லெவல் கிராசிங் உள்ளது. இதில் 1,367 கேட்டுகள் 'இன்டர் லாக்' தொழில் நுட்பத்தில் இணைக்கப்பட்டு உள்ளன. ரயில்வே கேட்டுகளையும் அதற்கு முன் உள்ள சிக்னல்களையும் இவை இணைத்து விடும். ரயில்வே கேட்டை மூடாவிட்டால், அந்த கேட்டை கடந்து செல்ல அந்த ரயிலுக்கு பச்சை சிக்னல் கிடைக்காது. இதனால் சில நூறு மீட்டர் தூரத்துக்கு முன்பாகவே ஓட்டுநர் நிறுத்திவிடுவார். விபத்து தடுக்கப்பட்டு விடும்.

**தெற்கு ரயில்வே கட்டுப்பாட்டில் உள்ள 276 கேட்டுகள் இந்த தொழில் நுட்பத்துடன் இன்னும் இணைக்கப்படவில்லை. அதில் ஒன்று இந்த செம்மங்குப்பம் ரயில்வே கேட் ஆகும். ஒரு திட்டத்தை இப்படி அரைகுறையாகவா செய்வார்கள்?**

2025-26 நிதியாண்டுக்கான ரயில்வே திட்டத்தில் லெவல் கிராசிங் பாதுகாப்புப் பணிகளுக்காக 706 கோடி ரூபாயை ஒன்றிய அரசு ஒதுக்கீடு செய்யது. மேம்பாலம், கீழ்ப்பாலம் அமைக்கும் பணிகளுக்காக 7000 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்துள்ளது. 2030 ஆம் ஆண்டுக்குள் அனைத்து லெவல் கிராசிங்குகளிலும் மேம்பாலம், கீழ்பாலம் அமைக்கப்பட்டு விடும் என்று சொல்லப்பட்டுள்ளது. சொல்லியதை ஒன்றிய அரசு செயல்படுத்திக் காட்ட வேண்டும்.

ரயில்வே லெவல் கிராசிங் விபத்துகளைத் தடுக்க நிரந்தரத் தீர்வுகளை இந்திய ரயில்வே துரிதமாக மேற்கொள்ள வேண்டும். சுரங்கப் பாதைகள் அமைத்தல், பாலங்கள் அமைத்தல் ஆகியவை இதற்கு நிரந்தரத் தீர்வு ஆகும். நிலங்களைக் கையகப்படுத்துதல், அதற்கான நிதி ஒதுக்கீடுகளை முறையாகச் செய்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்த வேண்டும்.

அனைத்து ரயில்வே கேட்டுகளும் 'இன்டர் லாக்' தொழில் நுட்பத்தின் அடிப்படையில் மாற்ற வேண்டும். மாற்றப்படாத பகுதிகளில் ரயில்வே ஊழியர்கள் தினந்தோறும் ஆய்வு செய்ய வேண்டும். இண்டர் லாக் தொழில் நுட்பத்துடன் இணைக்கப்படாத பகுதிகளில் ரயில் வருவதை ஒலிபெருக்கி மூலமாக அறிவிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். ரயில்வே கேட் அருகில் வேகத் தடையை அமைக்க வேண்டும். எச்சரிக்கை பலகைகளை அதிகம் வைக்க வேண்டும். அனைத்து ரயில்வே கேட் பகுதிகளிலும் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்த வேண்டும். அனைத்து பகுதியிலும் தடையின்றி மின்சாரம் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

**நிலாவில் மனிதனை அனுப்பி வாழ வைத்துக் கொண்டிருக்கும் காலத்தில் பூமியில் லெவல் கிராசிங்கில் உயிர்கள் பலியாவது பரிதாபத்திலும் பரிதாபம் ஆகும்.**

●●



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை, மாநிலங்களவை கழக குழுத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திருச்சி சிவா, டெல்லியில் மக்களவைத் தலைவர் தலைமையில் செயல்படும் அரசியலமைப்பு குழு (Constitution Club) நிர்வாகிகளுக்கான தேர்தலில் செயலாளர் (கலாச்சாரம்) பொறுப்புக்கு தேர்ந்தெடுக்கப்பட்டதையொட்டி, சந்தித்து வாழ்த்துப் பெற்றார். தமிழ்நாட்டிலிருந்து இந்த முக்கிய பொறுப்புக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வின்போது, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.எஸ். பாரதி அவர்கள் உடனிருந்தார்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.7.2025) திருவண்ணாமலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் 2 புதிய வழித்தடங்களில் மகளிர் விடியல் பயணத் திட்ட புதிய நகரப் பேருந்துகளையும்,4 வழித்தடங்களில் புதிய குளிர்சாதன புறநகர் பேருந்துகளையும் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித் தலைவர் க.தர்ப்பகராஜ், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட

# மீனவர்களை - மீன்பிடிப் படகுகளை உடனடியாக விடுவித்திட தூதரக நடவடிக்கைகள் எடுத்திடுவீர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – ஒன்றிய வெளியுறவு அமைச்சருக்குக் கடிதம்!

**சென்னை, ஜூலை 14-**

**இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிப்பதற்கு உரிய தூதரக நடவடிக்கைகளை எடுக்க வலியுறுத்தி வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

முதல்வர் அவர்கள் எழுதியுள்ள அக்கடிதம் வருமாறு:-

இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்ட மற்றொரு துயரச் சம்பவத்தை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். 13.07.2025 அதிகாலையில், ஏழு மீனவர்கள், பதிவு எண் INDTN10MM746 கொண்ட அவர்களின் இயந்திர மீன்பிடி படகுடன் கைது செய்யப்பட்டனர். அதே நாளில், மற்றொரு சம்பவத்தில், மற்றொரு இயந்திர படகு (INDTN10MM1040) இலங்கை கடற்படை கப்பலால் மோதப்பட்டதாகவும், இந்தப் படகின் பின்புறம் குறிப்பிடத்தக்க சேதத்தை ஏற்படுத்தியதாகவும் தெரிய வருகிறது. மீண்டும் மீண்டும் நிகழும் இந்தச் சம்பவங்கள் மிகவும் கவலையளிக்கின்றன. அவை நமது மீனவர்களின் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்திற்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல், அவர்களின் குடும்பங்களை நீண்டகால பொருளாதார நெருக்கடி மற்றும் தொடர்ந்த துயரங்களுக்கும் உள்ளாக்குகின்றன.

இந்த விவகாரத்தை மேலும் சிக்கலாக்கும் வகையில், 2024 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட மீனவர்களில் பலர் இன்னும் இலங்கை காவலில் உள்ளனர் என்பதை குறிப்பிட விரும்புகிறேன். தற்போது, 232 தமிழக மீன்பிடி படகுகளும் 50 மீனவர்களும் இன்னும் இலங்கை அதிகாரிகளால் சிறைபிடித்து வைக்கப்பட்டுள்ளனர். இந்த தொடர்ச்சியான அச்சங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க, கிடைக்கக்கூடிய அனைத்து தூதரக வழிகளையும் மேற்கொள்ளுமாறும் கைது செய்யப்பட்ட அனைத்து மீனவர்களையும் அவர்களது மீன்பிடி படகுகளையும் விரைவில் விடுவிக்க அவசர மற்றும் பயனுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அக்கடிதத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### மக்கள் பயன்பாட்டிற்காக - வரும் 16 ஆம் தேதி

# திருச்சி பஞ்சப்பூர் பேருந்து முனையம் திறக்கப்படும்!

## அமைச்சர் கே.என்.நேரு தகவல்!

திருச்சி, ஜூலை 14 -

திருச்சி பஞ்சப்பூர் பேருந்து முனையம் வரும் 16ஆம் தேதி முதல் மக்கள் பயன்பாட்டிற்கு திறக்கப்படும் -என அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

ஓரணியில் தமிழ்நாடு பரப்புரையை நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே என் நேரு திருச்சி எடமலைப்பட்டி புதூரில் பார்வையிட்டு தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய அமைச்சர் கே.என்.நேரு கூறியதாவது-

திருச்சி பஞ்சப்பூரில் கட்டப்பட்டு மே 9 ஆம் தேதி முதலமைச்சரால் திறக்க ப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி பேருந்து முனையம் வரும் 16ஆம் தேதி முதல் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். மக்களுக்கான அனைத்து அடிப்படை வசதிகளும் பேருந்து முனையத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பேருந்து முனையம் செயல்பாட்டிற்கு வந்த சில நாட்களில் அனைத்து கடைகளும் இயங்கும். சத்திரம் பேருந்து நிலையம் மற்றும் மத்திய பேருந்து நிலையம் வழக்கம் போல் செயல்பாட்டில் இருக்கும். தற்போதைக்கு தனியார் பேருந்துகள் விருப்ப ப்பட்டால் பஞ்சப்பூர் பேருந்து நிலையம் வரலாம்.

மக்கள் முழுமையாக பஞ்சப்பூர் பேருந்து நிலையத்தை பயன்படுத்தும் போது தனியார் பேருந்துகளும் அங்கு வந்து விடுவார்கள்.

ஆனால் அனைத்து அரசு பேருந்துகளும் பஞ்சப்பூர் பேருந்துநிலையத்திலிருந்து இயக்கப்படும்.

அரியமங்கலத்தில் உள்ள குப்பை கிடங்கில் இருந்து பிளாஸ்டிக் குப்பைகள் தனியாக பிரித்து அகற்றும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. ஏற்கனவே பிளாஸ்டிக்கை உரமாக மாற்றினோம், சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு அங்கிருந்து எடுக்கப்பட்ட பிளாஸ்டிக் அனுப்பப்பட்டது தற்பொழுது அந்த பிளாஸ்டிக் மூலம் சாலை அமைப்பது உள்ளிட்ட வேறு பணிகளுக்கு பயன்படுத்தலாமா என்பது குறித்து ஆராய்ந்து வருகிறோம் பணிகள் தொடர்ச்சியாக நடைபெற்று வந்தாலும் குப்பைகளை வேறு எங்கும் கொட்ட முடியாத சூழலில் அரியமங்கலம் குப்பை கிடங்குள்ளேயே கொட்டி வருகிறோம்.



குடும்பத் தலைவிகளுக்கு ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டத்தை செயல்படுத்தியது தி.மு.க. அரசுதான் மீண்டும் தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் எப்படி அந்த திட்டத்தை நிறுத்துவோம். நிச்சயம் அந்த திட்டம் தொடர்ந்து கொண்டே தான் இருக்கும்.

மக்களுக்கு ஒரு ரூபாய் கூட தராத எடப்பாடி பழனிச்சாமி நாங்கள் ஆயிரம் ரூபாய் தந்த பின்பு 1500 ரூபாய் தருவோம் என பேசுகிறார்.

உள்ளாட்சி அமைப்புகளை கலைக்க பரிந்துரை செய்யப்பட்டு இருப்பதாக பரவும் தகவலில் உண்மை இல்லை. நாங்கள் ஏற்படுத்திய அமைப்பை நாங்களே எப்படி கலைப்போம்.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்த நிகழ்வின்போது திருச்சி மத்திய மாவட்ட திமுக செயலாளர் வைரமணி, மாநகராட்சி மேயர் அன்பழகன், மாவட்ட பொருளாளர் துரைராஜ் மாவட்ட பணியாளர் முத்துச்செல்வம் ,, காஜாமலை விஜி,கிராப்பட்டி செல்வம் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.



புதுச்சேரி மணவெளி தொகுதியில் கலைஞர் நூலகம் – கழக அலுவலகத்தை புதுச்சேரி மாநில எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா திறந்து வைத்தார். உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.